| சாட்சி : PW1<br>விஜயலெட்சுமி | IA.3/23 in OS.386/11 | 17.07.2023 |
|---|---|---|

**PW1– குறுக்கு விசாரணை**

வழக்கின் வாதி பரிமளா எனது தங்கையாவார். 1ம் பிரதிவாதி பாலகிருஷ்ணன் எனது சகோதரர் ஆவார். எனது சகோதரி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரியாது. அசல் வழக்கில் பதிலுரையை நான் தான் தாக்கல் செய்துள்ளேன். எனது கணவர் ஒரு வருடமாக உடல்நிலை சரியில்லாமல் படுத்தபடுக்கையாக இருந்தார். எனது கணவருக்கு இருதயத்தில் அடைப்பு மாதிரி இருந்து சாப்பிடமுடியாமல் இருந்தார். சுமார் 2 மாதங்கள் திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார். எனது கணவர் சிகிச்சை எடுத்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. எனது கணவர் இறந்துவிட்டதால் அவர் படுத்தப்படுக்கையாக இருந்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் உடல்நிலை சரியில்லாமல் இல்லை என்றும், திடீரென தான் இறந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவரின் மருத்துவ ஆவணங்களை தாக்கல் செய்யாததாலேயே நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் அகிலாண்டேஸ்வரி, மோகன் ஆகியோருக்கு கிரையம் செய்து கொடுத்த சொத்து யாருடையது என்றால் எனது அம்மாவிற்கு எனது கணவர் வாங்கி வைத்த சொத்தாகும். அந்த சொத்தை தான் நான் அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன். வழக்கு சொத்து சம்மந்தமாக சொல்லி தான் மேற்படி நபர்களுக்கு கிரையம் செய்த கொடுத்தேனா என்றால் சொல்லிதான் விற்றேன். மோகன் அகிலோண்டேஸ்வரி ஆகியோர் இந்த வழக்கில் தங்களை தரப்பினராக சேர்க்கசொல்லி மனு தாக்கல்

செய்யவில்லை. மோகன், அகிலாண்டேஸ்வரி ஆகியோர் தங்களை தரப்பினராக சேர்க்கசொல்லி மனு தாக்கல் செய்து மனு தள்ளுபடியாகிவிட்டது எனக்கு தெரியாது. மோகன், அகிலாண்டேஸ்வரி ஆகியோர் கேட்டுக்கொண்டதற்காக நான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மோகன், அகிலாண்டேஸ்வரி ஆகியோருக்கு கிரையம் செய்து கொடுத்த சொத்து எனது குடும்ப பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. எனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள காரணங்கள் போதுமானதாக இல்லை என்றும், அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யாததாலும் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 28.10.2022 ந் தேதி தான் எனக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது குறித்து தெரிந்துகொண்டேன் என்றால் சரியல்ல. வழக்கின் வாதியை அலைக்கழிக்க வேண்டும் என்பதற்காக இந்த மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனுவிற்கான வழக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கே எதற்காக தாக்கல்செய்யப்பட்டுள்ளது என்பதே எனக்கு தெரியாயததால் வழக்கை நடத்தவேண்டும் என்ற எண்ணத்தில் நான் மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–செ. ராஜ்குமார்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

/உண்மைநகல்/

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.